சட்டமன்ற முறை என்பது இந்தியாவிலேயே—இந்தியப் பாராளுமன்றமாக இருந்தாலும், வேறு எந்த மாநிலச் சட்டமன்றமாக இருந்தாலும், நான் அறிந்த வரையில் தமிழ்நாடு சட்டமன்றத்திலே எவ்வளவு நேரம் வாதம் நடைபெறுகிறதோ, எவ்வளவு நேரம் கருத்துகள் பரிமாறப்படுகின்றனவோ, எவ்வளவு தாறுமாறான பேச்சுகள் இருந்தாலும்கூட, மொத்தத்திலே கருத்துகள் பரிமாறப்படுகின்றனவோ, அந்த அளவு வேறு எந்தச் சட்டமன்றத்திலும் (மேசையைத் தட்டும் ஒலி) நடைபெறுவதாக பத்திரிகைச் செய்திகள் மூலமாக என்னால் அறிய முடியவில்லை. எனவே நான் தெரிவிக்க விரும்புகிறேன்; நம்முடைய சட்டமன்றம், சிறப்பாக நடைபெறுவதற்கு மேலும் நீங்கள் ஆர்வம் எடுத்துக் கொண்டு, இந்த நேரத்தை வீணாக்குகிற முறையில் அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்துகிறவர்களுக்கு நீங்கள் தடையாக இருப்பீர்களேயானால், அதிக நேரம் நமக்குக் கிடைக்கும்.

முற்பகல் 11-15

அதைப்போல, மகளிருக்கு உரிமை தரவேண்டுமென்று திரும்பத் திரும்பச் சொன்னார்கள். ஒவ்வொரு கட்சியிலுமுள்ள மகளிருக்கு, அந்தக் கட்சி அவருடைய பெயரை முன்மொழிந்து விவாதத்திலே கலந்துகொள்வதற்குத் தருமானால், அவர்களுக்குத்தான் முதலிடமே தவிர, வேறு யாருக்கும் தரப்படுவது இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி. (குறுக்கீடு) மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, செல்வி பாலபாரதி அவர்கள் இவ்வளவு நேரம் அடுக்கடுக்காக, சரமாரியாக சபாநாயகர்மீதும், மற்றவர்கள்மீதும் குற்றச்சாட்டுக்களை அள்ளி வீசுவதற்கு இடம் கொடுத்ததே நாங்கள் கடைப்பிடிக்கின்ற ஜனநாயகம்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி.

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு முதல்வர் அவர்கள், மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். என்னுடைய யதார்த்த அனுபவங்களிலிருந்துதான் சொல்கிறேனே தவிர, குற்றச்சாட்டுகள்

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வேண்டுமென்றே, அவதூறாக நீங்கள் இந்த வழக்கிலே சம்பந்தப்படுத்தி, ஆதி திராவிட மக்களுடைய நிலங்களை அபகரித்தார் என்ற பொய்யான குற்றச்சாட்டைப் பதிய வைத்து--(குறுக்கீடு)

பிற்பகல் 12-05

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் நான் ஒன்றை மட்டும் கேட்டுக்கொள்கிறேன், கடந்த பிப்ரவரி மாதம் இந்த கமிஷனுடைய அறிக்கை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கொடுக்கப்பட்டு விட்டது. 14-4-2010 அன்று விடுதலைச் சிறுத்தைகள் கட்சியினர் நடத்திய விருது வழங்கும் விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கலந்து கொண்டார்கள். அன்றைக்குக்கூட, ஆதி திராவிட மக்களின் நிலங்களை முன்னாள் முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அபகரித்துக் கொண்டு வீடு கட்டிக் கொண்டதாக அந்தப் பொதுக் கூட்ட மேடையிலே பேசினார்கள். மக்கள் செல்வாக்குப் பெற்ற இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பற்றி வேண்டுமென்றே, பொய்யான தகவலைத் தமிழ்நாட்டு மக்களிடத்திலே பரப்பி, அம்மா அவர்களுக்கு ஒரு அவப் பெயரை உண்டு பண்ண வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தில், இந்த முயற்சி செய்யப்பட்டது என்பதைத்தான் நாங்கள் இந்த சட்டமன்றத்திலே வலியுறுத்திச் சொல்லிக் கொண்டிருக்கிறோமேயொழிய, விசாரணை கமிஷனுக்குள்ளே நாங்கள் போகவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விசாரணை கமிஷனுக்குள்ளே நீங்கள் போகவில்லையென்றால். . . (குறுக்கீடு) மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சிறுதாவூர் விவகாரம் பற்றி நீதியரசர் அவர்கள் வெளியிட்டுள்ள, தந்துள்ள அறிக்கை குறித்த, எந்தக் கருத்துகளைப் பதிவு செய்ய வேண்டுமோ, அவற்றையெல்லாம் நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் பதிவு செய்திருக்கிறார்கள். அதற்குப் பிறகு இதிலே விவாதம் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. வேண்டுமென்றே, முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாமீது அவதூறு கூறப்பட்டிருப்பதாகச் சொல்லி, யாரோ நினைத்ததாக அவர் குற்றம் சாட்டுகிறார்.

அந்தக் குற்றச்சாட்டு உண்மையாக இருக்குமேயானால், அது எங்களுக்குரியதல்ல. அந்தக் குற்றச்சாட்டுகளைக் கொடுத்து, இதை விசாரணைக் கமிஷனுக்கு அனுப்ப வேண்டுமென்று ஊர்வலமாக வந்து கோட்டையிலே என்னிடத்திலே அதை வழங்கியவர்கள்-- இன்றைக்கு அ.தி.மு.க.விற்குத் தோழமைக் கட்சியாகவோ, அல்லாமலோ இருக்கின்ற மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியைச் சார்ந்த நண்பர்கள்தான். குறிப்பாக, அருமை நண்பர் திரு. என். வரதராஜன் அவர்கள்தான் அதைக் கொண்டு வந்து கொடுத்தார்.

இப்போது இங்கே எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் எடுத்துச் சொன்ன குற்றச்சாட்டுகளெல்லாம் உண்மையென்றால், அது யாருக்குப் பொருந்தும் என்றால், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியினுடைய தலைவர்களுக்குத்தான் அது பொருந்தும். அவை எங்களுக்குப் பொருந்தக்கூடியவைகளல்ல. (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களும் உண்மையைச் சொன்னார்களா அல்லது உண்மைக்கு மாறான ஒன்றை எழுதிக் கொடுத்து விசாரிக்கச் சொன்னார்களா என்பதெல்லாம் முழு விவரங்களும் விரிவாக வெளி வந்த பிறகுதான் தெரியும். இப்பொழுது நாங்களும், இதை வைத்துக்கொண்டு எந்த நடவடிக்கையையும் எடுத்துவிடவில்லை.

இந்த அறிக்கையில் நடவடிக்கை எடுத்து, நிலத்தையெல்லாம் கைப்பற்ற வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அதிலே முன்னாள் முதலமைச்சருக்கு வேண்டியவர்கள் அல்லது அவர்களுக்கு உறவினர்கள் என்றிருந்தாலும்கூட நாங்கள் அவசரப்பட்டு எந்த நடவடிக்கையையும் எடுக்க முற்படவில்லை. இந்த அறிக்கை சில நாட்களுக்கு முன்பே வந்திருந்தாலும்கூட, உடனடியாக நாங்கள் நடவடிக்கை எடுக்காததற்குக் காரணம், பொறுத்திருந்து, பொறுமை காட்டி, விவரங்களை அவையிலே விவாதித்துச் செய்யலாம் என்பதற்காகத்தான்.

அவையிலே ஒரு அறிக்கையைப் பற்றி விவாதிப்பது என்றால், அவைத் தலைவர் அவர்களிடத்திலே சொல்லி, அவர் குறிப்பிடுகிற நாளில், எல்லாக் கட்சித் தலைவர்களுடைய ஆலோசனையின்பேரில்--அந்தக் கட்சித் தலைவர்களெல்லாம் குறிப்பிடுகின்ற ஒரு நாளில்-அலுவல் ஆய்வுக் குழுவில் முடிவு செய்து-அந்த அறிக்கைமீதான விவாதத்தை வைத்துக் கொள்வதில் எங்களுக்கு எந்தவிதமான ஆட்சேபனையும் கிடையாது.

முன்னாள் முதலமைச்சர்மீது ஒரு தூசி விழவோ அல்லது ஒரு களங்கம் ஏற்படுத்த வேண்டுமென்பதல்ல எங்கள் நோக்கம். அந்தக் களங்கத்தை யாராவது ஏற்படுத்தினால், அதற்கு இடம் தரக்கூடாது என்ற நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுடைய நேர்மையான குணம் அதற்கு இன்றைக்கு உடன்படுமேயானால், அதற்காகக் காத்திருந்து, நம்முடைய சட்டமன்றத்தினுடைய கட்சித் தலைவர்களுடைய கூட்டத்தை, அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தைக் கூட்டி, ஒரு நாள் இந்த அறிக்கையின்மீது விவாதம் வைத்துக்கொண்டு, எந்த விவரங்களைச் சொல்ல வேண்டுமோ, அந்த விவரங்களைச் சொல்ல வாய்ப்பு ஏற்படும். அதுவரையிலே பொறுத்திருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன். நாங்கள் எப்படி அவசரப்பட்டு எந்தவிதமான நடவடிக்கையையும் எடுக்கவில்லையோ, அதையும் நீங்கள் கவனத்தில் வைத்துக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ. பன்னீர்செல்வம்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே ஒரு நீண்ட விளக்கத்தினைத் தந்தார்கள். நான் அவரிடம் கேட்பது ஒரே ஒரு கேள்விதான். 14-4-2010 அன்று விடுதலை சிறுத்தைகள் கட்சியினுடைய விருது வழங்குகின்ற விழாவில் ஏற்கெனவே முதலமைச்சராக இருந்த ஒருவர் சிறுதாவூர் என்கிற இடத்தில் பஞ்சமர்களுக்கு என்று இருந்த நிலங்களையெல்லாம் அபகரித்து வீடு கட்டிக்கொண்டு, அந்த ஊரிலே இருந்த ஆதி திராவிட மக்களையெல்லாம் வெளியே விரட்டிவிட்டதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசி இருக்கின்றார்கள். கமிஷனுடைய அறிக்கை மாண்புமிகு முதலமைச்சரிடம் பிப்ரவரி மாதம் கொடுக்கப்பட்டிருக்கின்றது. அதற்குப் பின்னால் ஏப்ரல் மாதம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொதுக் கூட்ட மேடையிலே இதைப் பேசி இருக்கின்றார்கள். அதாவது, சட்டமன்றத்திலே இந்த அறிக்கை வைப்பதற்கு முன்பாகவே இந்தக் குற்றச்சாட்டு நிரூபணம் ஆகி இருக்கின்ற மாதிரி ஒரு தோற்றத்தை வெளியிலே பொது மக்களிடத்திலே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய நற்பெயருக்கு

அவப்பெயர் வர வேண்டும் என்ற நோக்கத்தோடுதான் இதைப் பேசி இருக்கின்றார்கள். அதற்கு மாண்புமிகு முதலமைச்சர் என்ன பதில் சொல்லப் போகிறார் என்பதுதான் என்னுடைய கேள்வி. *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பதில் சொல்வது ஒன்றும் பெரிதல்ல. உண்மை என் பக்கம் இருக்கும்போது, வாய்மை என் பக்கம் இருக்கும்போது, பதில் சொல்வது ஒன்றும் பிரமாதமான காரியம் அல்ல. *(மேசையைத் தட்டும் ஒலி)* இப்பொழுதும் சொல்கிறேன். செங்கல்பட்டு வட்டம், சிறுதாவூர் கிராமத்தில் பங்களா அமைக்கப்பட்டு, காம்பவுண்டு மற்றும் வேலிக்குள் அமைந்துள்ள மொத்த நிலப்பரப்பு 115 ஏக்கர். இதில் அரசுப் புறம்போக்கு நிலம் 35 ஏக்கர். காம்பவுண்டுக்கு வெளியில், நிலமற்ற ஏழைகள் மற்றும் தலித்களுக்கு வழங்கப்பட்ட நிலத்தை பரணி ரிசார்ட் நிறுவனத்தார் விதிமுறைக்கு முரணாக வாங்கியது 53 ஏக்கர். இவர்கள் எல்லாம் யார் என்ற இந்த விவரத்தைத்தான் பொதுக் கூட்டங்களிலே பேசி இருப்போம். ஒருவரைக் குறிப்பிட்டுக் குற்றஞ்சாட்டுவது, தேர்தல் நேரத்தில் பொதுக் கூட்டங்களில், நீங்களும் அதற்குச் சளைத்தவர்கள் அல்ல, நாங்களும் யாருக்கும் சளைத்தவர்கள் அல்ல. அதை மறந்துவிடாமல், பொதுக் கூட்டத்திலே பேசினாய், இங்கே பேசினாய் என்றெல்லாம் பேசுவது, ஏதோ கதைவிடுவதுபோல ஆகிவிடும். *(குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தப் பிரச்சினையை அப்படியே விடுங்கள். மற்றவற்றிற்குப் போங்கள். You go to other subjects.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிறபோது, பொதுக் கூட்டத்திலே பேசினார் என்று சொன்னார்கள். பொதுக் கூட்டத்திலே பேசியது பத்திரிகைச் செய்தியிலே வந்திருக்கிறது. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. செங்கோட்டையன், சொல்கிறேன் கேளுங்கள். அடுத்த subject-க்குப் போங்கள். *(குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுடைய பதிலுரை. (குறுக்கீடு)

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் ஒரு கருத்தை அறிவிப்பார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 12-25

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003 ஆம் ஆண்டு இந்தப் பேரவையிலே தலைவராக இருந்த தமிழறிஞரும், என்னுடைய அருமைத் தம்பிகளில் ஒருவருமான மறைந்த காளிமுத்து அவர்கள் இங்கே ஒரு ஆணையை வெளியிட்டார். அவர் அப்போது இங்கே என்ன சொன்னார் என்றால், அவையிலே குழப்பம் ஏற்பட்டபோது, வெளியேற்றப்பட்டவர்கள் வெளியே சென்று பேட்டி கொடுப்பது-- அமைச்சர்களை அவதூறாகப் பேசுவது--இவைகளைப் பற்றிச் சொன்னார். அவர் சொன்ன வாசகத்தை அப்படியே சொல்கிறேன்.

"இங்கேயிருந்து புறப்பட்டுப் போனவர்கள் லாபியிலே நிருபர்களுக்குப் பேட்டி அளித்துக்கொண்டு, அங்கேயே Press Conference நடத்திக்கொண்டிருப்பதைப் போலத் தகவல் வருகிறது. இது உண்மையாக இருக்குமேயானால், அதைத் தடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி நடைபெறுமேயானால், அவைக் காவலர்கள் உடனடியாக அந்தத் தலைவர்களை, கட்சித் தலைவர்களை உடனடியாக அங்கேயிருந்து வெளியேற்ற வேண்டும் என்று நான் ஆணையிடுகிறேன். அதேபோல, பத்திரிகையாளர்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறேன், பத்திரிகை நிருபர்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறேன், அவையிலிருந்து வெளியேறிய, வெளியேற்றப்பட்ட உறுப்பினர்கள் ஏதாவது பேட்டியளித்தால், சட்டமன்ற வளாகத்திற்குள்ளே அவர்களுடைய பேட்டிகள் எதையும் பதிவு செய்யக்கூடாது, அப்படிப் பதிவு செய்யக்கூடிய பத்திரிகை நிருபர்கள் பிறகு இங்கே உள்ளே அனுமதிக்கப்பட மாட்டார்கள். அந்த அளவிற்கு நிலைமை வரும் என்பதை எச்சரிக்கையாகத் தெரிவித்துக்கொள்கிறேன்" என்று அன்றைய பேரவைத் தலைவர் காளிமுத்து அவர்கள் ஒரு அச்சுறுத்தலை வெளியிட்டார், இந்த அவையில், கடந்த அவையில்.

ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், வெளியிலே செல்கின்றவர்கள் இப்போதுகூட, சில நேரத்திற்கு முன்பு வெளியிலே சென்றவர்கள், என்னைப் பற்றியும், தங்களைப் பற்றியும் "ஒழிக" கோஷம் போட்டது மாத்திரமல்ல, மிகுந்த கேவலமான வார்த்தைகளையெல்லாம் சொல்லி, ஒரு முதலமைச்சரைப் பற்றி எந்த அளவிற்குத் தங்களது ஆத்திரத்தைக் காட்ட வேண்டுமோ, அந்த அளவிற்கு ஆத்திரத்தைக் காட்டி கோஷம் போட்டிருக்கிறார்கள். நான் அதற்கெல்லாம் கவலைப்படவில்லை. நான் கவலைப்படுவது, decorum—அவையினுடைய மொத்தப் பண்பாடு; இதற்கென்று இருக்கின்ற ஒரு அமைப்பு ரீதியான அங்கீகாரம் சூறையாடப்படுகிறதே என்பதுதான். அதனால்தான், அந்தக் காலத்திலே காளிமுத்து அவைத் தலைவராக இருந்தபோது எடுத்துச் சொன்ன அந்த அச்சுறுத்தலை இங்கே நான் வெளியிட விரும்பினேன். தயவுசெய்து அதைப் பின்பற்றி தாங்கள் நடந்துகொள்ள வேண்டும் என்று அவைத் தலைவராகிய தங்களையும், இந்த அவையிலே உள்ள கட்சித் தலைவர்களையும் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு எடுத்து வைக்கப்பட்ட மானியக் கோரிக்கைகள், பொதுத் துறை, தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை), மாநில சட்டமன்றம், ஆளுநர் மற்றும் அமைச்சரவை, நிதித் துறை, திட்டம், வளர்ச்சி மற்றம் சிறப்பு முயற்சிகள் துறை மற்றும் ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் ஆகிய இந்தத் துறைகளைப் பற்றி இந்த அவையில் மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. கே. மகேந்திரன், திரு. எம். அன்பழகன், முனைவர் கு. ஜெயக்குமார், திரு. மு.க. பெரியசாமி, செல்வி கே. பாலபாரதி, திரு. எஸ். இராசசேகரன், டாக்டர் தி. சதன் திருமலைக்குமார், திரு. து. ரவிக்குமார், திரு. எம்.பி. சுடலையாண்டி, திரு. கே.ஏ. செங்கோட்டையன், இடையிலே point of order என்ற முறையில் திரு. சி. ஞானசேகரன் ஆகிய அவ்வளவு பேரும் இதிலே கலந்துகொண்டு உரையாற்றியிருக்கிறார்கள். உரையாற்றியவர்களுக்கெல்லாம் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். குறிப்பாக, இன்று பல்வேறு

2010 மே 14]

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள், மகாராஷ்டிரா, ஆந்திரா, கேரளா, கர்நாடகா ஆகிய எல்லா மாநிலங்களையும்விட தமிழ்நாடு அந்த நிதிநிலையைப் பொறுத்த அளவிலே மிகவும் standard-ஆக இருந்து கொண்டிருக்கிறது; மற்றவர்கள் எல்லாம் நிறையக் கடன் வாங்கியிருக்கிறார்கள்; அதில் முன்னணியில் இருக்கிறது என்பதை மிகத் தெளிவாக எடுத்துக் கூறினார்கள். எங்களுடைய முதலமைச்சர் அவர்கள் இத்தனை ஆண்டு காலம் அனுபவமிக்கவர்களாக இருந்து, எங்களுக்காக உழைத்துக் கொண்டிருக்கிற அவர் நிச்சயமாக இதைப் பரிசீலிப்பார். இதில் பார்த்தீர்கள் என்றால், நீங்கள், அரசாங்கத் தொகுப்பிலே இருந்து செய்யக்கூடிய செலவை எம்.எல்.ஏ.—க்கள் மூலமாக ரோடு வசதி மற்றும் குடிநீர் வசதி செய்யப் போகிறீர்கள். ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ரூ.5 இலட்சம்தான் ஏற்றினார் என்றால், வெளியே யாரும் நம்பமாட்டார்கள். இவ்வளவு தாராள மனமுள்ள கருணை மிக்க முதலமைச்சர் ரூ.5 இலட்சம் தானா கொடுத்தார்கள் என்று சொல்லுவார்கள். ஆகவே, நாங்கள் 2½ கோடி ரூபாய் என்று கேட்டதைக் கொஞ்சம் குறைத்துச் சொல்கிறோம். நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்வது, எங்களுடைய ஒட்டுமொத்த, அனைத்து சட்டமன்ற உறுப்பினர்கள் சார்பாக நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன், இதை ரூபாய் 2 கோடியாக உயர்த்த வேண்டும். ஏனென்றால், தேர்தல் வேறு வரப் போகிறது. போகிற இடங்களில் பொது மக்கள் ஆங்காங்கே எங்களைப் பிடித்துக்கொள்வார்கள், இந்தப் பணி செய்யுங்கள், அந்தப் பணி செய்யுங்கள் என்று. ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதை ரூ.2 கோடியாக உயர்த்தித் தர வேண்டுமென்று பணிவன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன். (குறுக்கீடு) மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** திருக்குறளில் அறம், பொருள், இன்பம், வீடு என்று நான்கு பகுதிகள் உண்டு. இதிலே நான்காவது பகுதியை ஒவ்வோர் ஆண்டும் ஞாபகப்படுத்தி, கேட்டுக்கொண்டிருக்கும் வழக்கத்தை திரு. ஞானசேகரன் கடைப்பிடித்து வருகிறார். அறம், பொருள், இன்பம் என்று மூன்றும் கொடுத்தாலும், எங்களுக்குக் கவலையில்லை. எங்களுக்கு வீடு

வேண்டும், வீடு வேண்டும் என்று கேட்டுக்கொண்டே இருக்கிறார். வீடு என்பதற்கு வட மொழியிலே இன்னொரு பொருள் உண்டு, மோட்சம் என்று. (மேசையைத் தட்டும் ஒலி) அதைத் தர நான் விரும்பவில்லை. இருந்தாலும், அது பற்றி அதிகாரிகளோடும், அமைச்சர் பெருமக்களோடும், நம்முடைய அவை முன்னவரோடும் கலந்தாலோசித்து, ஒரு செய்தியைச் சொல்ல விரும்புகின்றேன். நற்செய்திதான். சட்டப் பேரவை உறுப்பினர்கள் தங்களுக்கு வீடுகள் கட்டிக்கொண்டு வசிக்க ஏற்ற வகையில் அரசு வீட்டுமனைகள் வழங்க உரிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று நீண்ட காலமாகவே உறுப்பினர்கள் கேட்டு வருகின்றீர்கள். அவர்களுக்கு சென்னைக்கு அருகில் பழைய மாமல்லபுரம் சாலையையொட்டி சுமார் 50 ஏக்கர் நிலப் பரப்பில் சட்டப் பேரவை உறுப்பினர்களுக்கான வீடுகள் கட்டிக்கொள்ள வீட்டுமனைகள், அவற்றிற்குரிய சந்தை மதிப்பை வசூலித்துக்கொண்டு வழங்க அமைச்சரவையில் பரிசீலனை செய்து முடிவெடுத்து அறிவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. தி. வேல்முருகன்.

பிற்பகல் 12-55

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடந்த சில ஆண்டுகளாக சட்டப் பேரவை உறுப்பினர்கள் கையொப்பமிட்டு வைத்த அந்தக் கோரிக்கையை நிறைவேற்றித் தந்தமைக்காக நன்றி கூறிக்கொள்கிறேன். அதேபோல், சட்டமன்ற உறுப்பினர்களின் தொகுதி மேம்பாட்டு நிதிக்கும் தங்களுடைய அறிவிப்பு வரும் என்று ஆவலோடு எதிர்பார்த்தோம். அந்த அறிவிப்பையும் தங்களிடம் எதிர்பார்க்கிறோம். மேலும், . . .

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீண்டும் அதை வற்புறுத்தினால், அந்த ஐந்து இலட்சமும் குறைக்கப்படும். (சிரிப்பு)

திரு. என். நன்மாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. என். நன்மாறன். (குறுக்கீடு) திரு. தி. வேல்முருகன், சொல்லுங்கள்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேறொரு சப்ஜெக்ட். மேலும் ஒரு சப்ஜெக்ட். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலும் ஒரு முக்கியமான நிகழ்வை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கும், நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் கவனத்திற்கும் கொண்டு வருகிறேன். கடந்த 18 ஆண்டு காலமாக இந்தச் சட்டப் பேரவைச் செயலகத்தில் பணி செய்கின்ற நிரந்தரமில்லாத தொழிலாளர்கள் இதுபோன்ற கூட்டத் தொடர் மற்றும் ஆளுநர் உரையின்மீதான விவாதத்தின்போது மட்டும் உதவியாளர்களாக மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், சட்டப் பேரவை உறுப்பினர்களுக்கும், அரசுத் துறை அலுவலர் பெருமக்களுக்கும் அவர்கள் உதவி செய்துவிட்டு வேறு பணிகளுக்குச் சென்றுவிடுகிறார்கள். பல்வேறு துறைகளில் 10 ஆண்டு காலம், 5 ஆண்டு காலம் பணி செய்கின்றவர்களை நிரந்தரப்படுத்தி, சம்பளத்தை அதிகப்படுத்தி அவர்களுக்கு வாழ்வளித்திருக்கிற மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், ஒன்று அவர்களுக்கு ஊதியத்தை உயர்வாகத் தந்தும், அல்லது இவ்வளவு ஒரு பிரம்மாண்டமான சட்டப் பேரவைச் செயலகம் மற்றும் தலைமைச் செயலகத்தைக் கொண்டு வந்திருக்கிற தாங்கள், அதன் பராமரிப்புப் பணிகளுக்காகவாவது, அலுவலகப் பராமரிப்புப் பணிகளிலாவது அவர்களைப் பணி நிரந்தரப்படுத்துவதற்காக எதிர்கால நடவடிக்கைகளை மேற்கொண்டு, அந்தத் துப்புரவுப் பணியாளர்கள், இங்கேயிருக்கிற அலுவலக உதவியாளர்களுடைய வாழ்வில் ஒளியேற்றுவதற்கும், சம்பளத்துடன்கூடிய உயர்வு ஏதாவது ஒன்று தருவதற்கும் நம்முடைய தமிழக முதல்வர் அவர்களும், நம்முடைய நிதி அமைச்சர் அவர்களும் முன்வர வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. டி. ஜெயக்குமார், கொஞ்சம் இருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றி அரசு பரிவுடன் பரிசீலிக்கும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. டி. ஜெயக்குமார்.